Regional Bulletin

Puducherry

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 25.04.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் மே 13 ஆம் தேதி நடைபெற உள்ள 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான, திரு நரேந்திர மோடி இன்று மத்திய பிரதேஷ் மாநிலம் மொரேனா, மற்றும் உத்திரபிரதேஷ் மாநிலம் ஆக்ராவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மூத்த தலைவர்களின் தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் குறித்து, தேர்தல் ஆணையம், காங்கிரஸ்-பிஜேபி ஆகிய இரு கட்சிகளுக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

தேர்தல் 1 (17)

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கேரளத்தின் அனைத்து 20 தொகுதிகளிலும், கர்நாடகத்தில் 14, ராஜஸ்தானில் 13, மகராஷ்டிரா மற்றும்

உத்திரபிரதேசத்தில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 6, அசாம் மற்றும் பீகாரில் தலா 5, சட்டீஸ்கர் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 3 தொகுதிகளிலும், மணிப்பூர்-திரிபுரா மற்றும் ஜம்மு-காஷ்மீரில் தலா 1 தொகுதியிலும் நாளை தேர்தல் நடைபெறும். மத்திய பிரதேஷ் மாநிலம் பேட்டுல் தொகுதியில் பகுஜன் சமாஜ வேட்பாளர் மறைவு காரணமாக, தேர்தல் 3 ஆம் கட்டத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நாளைய 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலில், மொத்தம் ஆயிரத்து 198 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் உள்ளனர். கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு ராகுல்காந்தி, திருவனந்தபுரம் பிஜேபி வேட்பாளர் திரு ராஜீவ் சந்திரசேகர், கர்நாடக மாநிலம் பெங்களூரு தெற்கு தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு தேஜஸ்வி சூர்யா உள்ளிட்டோர் நாளைய தேர்தலில் முக்கிய வேட்பாளர்களாக களத்தில் உள்ளனர்.

தேர்தல் 2 (12)

இதற்கிடையே, 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் அடுத்தமாதம் 7 ஆம் தேதி நடைபெற உள்ள, 3-ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், சம்பந்தப்பட்ட தொகுதிகளில் நடைபெற்று வருகிறது. குஜராத் மாநிலத்தின் அனைத்து 25 மக்களவை தொகுதிகளும் இதில் அடங்கும்.

10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் மே 13 ஆம் தேதி நடைபெற உள்ள 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 49 தொகுதிகளில் அடுத்த மாதம் 20 ஆம் தேதி நடைபெற உள்ள 5 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை நாளை வெளியிடப்பட்டு, வேட்பு மனு தாக்கல் தொடங்க உள்ளது.

மோடி 1(16)

3 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக மே 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள மத்திய பிரதேஷ் மாநிலம் மொரேனா தொகுதியில், மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அனைவருக்கும் வளர்ச்சி-அனைவருக்கும் ஆதரவு என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்படும் கட்சி பிஜேபி என்று அவர் கூறினார். ஜாதி-மத பாகுபாடு இன்றி, நாடு முழுவதும் கோடிக் கணக்கிலான மக்களுக்கு, அரசு, இலவச ரேஷன் வழங்குவதாகவும், 4 கோடி ஏழைகளுக்கு கல் வீடு கட்டித் தரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 11 கோடி வீடுகளுக்கு குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதிலும், ஜாதி-மத பாகுபாடு இருக்கவில்லை என அவர் கூறினார்.

தொடர்ந்து, 4 ஆம் கட்ட மக்களவை தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, உத்திரபிரதேஷ் மாநிலம் ஆக்ரா பகுதியிலும் பிரதமர் இன்று தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங், உத்திரபிரதேசத்தின் லக்கிம்பூர்கேரி பகுதியில் தேர்தல் பிரச்சாரம்

மோடி 2(9)

மேற்கொண்டார். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் நாட்டின் எல்லைகள் மிகுந்த பாதுகாப்புடன் பராமரிக்கப்படுவதாகவும், எல்லைப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். இதற்கிடையே, 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக மே 13 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள உத்திரபிரதேஷ் மாநிலம் கன்னாஜ் தொகுதியில் சமாஜ்வாதி கட்சி தலைவர் திரு அகிலேஷ் யாதவ் இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திரு பவன் கேடா இன்று லக்னோவில் காங்கிரஸ் தொண்டர்களிடையே உரையாற்றுகிறார்.

*காங்கிரஸ்-பிஜேபி* (9)

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இல்லாத பிரச்சனைகளை இருப்பது போல் எழுப்பி, பிஜேபி விமர்சிப்பதாக மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ஜெயராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார். பாரத் ஜோடோ யாத்திரை மற்றும் பாரத் ஜோடோ நியாய யாத்திரை மூலம் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட கோரிக்கைகளை வைத்தே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். பணவீக்கம், வேலை வாய்ப்பின்மை போன்ற மக்கள் பிரச்சனைகளை முன் வைத்து தேர்தலில் போட்டியிடவே காங்கிரஸ் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

*தேசியவாத காங்கிரஸ்* (12)

திரு சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ், மக்களவை தேர்தலுக்கான தனது தேர்தல் அறிக்கையை, புனேயில் இன்று வெளியிட்டுள்ளது. ஜாதி வாரி கணக்கெடுப்பு, விவசாயிகளுக்கு நலவாரியம், வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு உள்ளிட்ட வாக்குறுதிகள், ஷபத்நாமா என்னும் இந்த தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு உள்ளிட்ட சட்டங்களை கட்சி மறு ஆய்வு செய்து மாற்றங்களை முன் மொழியும் என்றும் தேசிய வாத காங்கிரஸ் தெரிவித்துள்ளது. ஜம்மு-காஷ்மீருக்கு முழு மாநில அந்தஸ்து வழங்கப்படுவதை கட்சி ஆதரிப்பதாகவும், ஒரே நாடு-ஒரே தேர்தல் என்ற கருத்தை ஏற்கவில்லை என்றும் தேசிய வாத காங்கிரசின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பதவிஏற்பு* (4)

மாநிலங்களவை தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று நாடாளுமன்ற வளாகத்தில், புதிய மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். திரு தேவேந்திர பிரதாப் சிங், திரு தேஜ்வீர் சிங், திரு

மகேந்திர பட் ஆகியோர், புதிய மாநிலங்களவை உறுப்பினர்களில் அடங்குவர்.

பாரதிய ஜனதா மற்றும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளை மீறி இருப்பதாக கூறப்படும் புகார்கள் மீது தேர்தல் ஆணையம் பாரதிய ஜனதா கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இக்கட்சிகள் வரும் 29 ஆம் தேதி காலை 10 மணிக்குள் நோட்டீசுக்கு பதில் அளிக்க வேண்டும் என்றும் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. அரசியல் கட்சிகளின் முக்கியத் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் உயர் தரத்தை பராமரிக்க வேண்டும் என்றும், தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகளை, எழுத்திலும், உணர்விலும் முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையத்தின் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கேரள மாநிலம் கோட்டயத்தில் மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர் ஆற்றிய தேர்தல் பிரச்சார உரையை ஆட்சேபித்து பாரதிய ஜனதாவும், ராஜஸ்தான் மாநிலம் பஸ்வாரா பகுதியில் மூத்த பிஜேபி தலைவர் ஒருவர் ஆற்றிய தேர்தல் பிரச்சார உரையை ஆட்சேபித்து, காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளும் தேர்தல் ஆணையத்திடம் புகார் செய்துள்ளன.

அறிவுசார் சொத்துரிமை பற்றிய உலகளாவிய தலைமைத்துவ உச்சி மாநாடு மற்றும் விருது வழங்கும் விழா, அசோச்சாம் தொழில்-வர்த்தக கூட்டமைப்பு சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. அசோச்சாம் அறிவுசார் சொத்துரிமை சபையின் தலைவர் திரு பிரவீண் ஆனந்த் மாநாட்டில் பேசுகையில், பாரம்பரிய ஞானம் மற்றும் கலாச்சாரத்தில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வருவதில், அறிவுசார் சொத்துக்களுக்கு முக்கிய பங்கு இருப்பதாக கூறினார். அறிவுசார் சொத்துக்கள் முறைகேடாக மற்றவர்களால் பயன்படுத்தப்படுவதை தடுக்க திறம்பட்ட நடவடிக்கைகளும், ஒழுங்குமுறை விதிகளின் அமலாக்கத்தில் உள்ள சவால்களை சமாளிக்க சட்டத் திருத்தங்களும் அவசியம் என அவர் வலியுறுத்தினார். மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில் பெருக்கத் துறையின் கூடுதல் செயலர் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வீடியோ (15)

இந்திய ஊடக மற்றும் பொழுதுபோக்குத் துறையின் சந்தை மதிப்பை 100 பில்லியன் டாலராக உயர்த்தும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்பு துறை செயலர் திரு சஞ்சய் ஜாஜு கூறியுள்ளார். இந்திய வீடியோ துறையின் எதிர்காலம் குறித்து, ஆசிய வீடியோ தொழில் சங்கம் சார்பில் மும்பையில் இன்று நடைபெற்ற மாநாட்டை, தொலை தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் தலைவர் திரு அனில் குமார் லகோட்டி-யுடன் இணைந்து அவர் தொடக்கி வைத்தார். கேபிள் தொலைக்காட்சி ஒழுங்கு முறை சட்டத்திற்கு பதிலாக ஒலிபரப்பு சேவைகள் ஒழுங்கு முறை மசோதா கொண்டு வரப்படுவதாகவும், இத்துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருக்கு, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப சம வாய்ப்பு வழங்குவதை உறுதிப்படுத்த புதிய மசோதா உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். தரமான தொலை தொடர்பு சேவைகள், மலிவான கட்டணத்தில் மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த தொலைதொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் முயன்று வருவதாக, திரு லகோத்தி தனது உரையில் கூறினார்.

சட்டீஸ்கர் (8)

சட்டீஸ்கர் மாநிலம் தந்தேவாடா மாவட்டத்தின் பர்சூர் வனப்பகுதியில் ஆயுதம் தாங்கிய மாவோயிஸ்டுகளின் நடமாட்டம் இருப்பதாக தகவல் பெறப்பட்டதை தொடர்ந்து நேற்றிரவு கூட்டு பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது, பாதுகாப்பு படையினரின் ஒரு துப்பாக்கியில் இருந்து எதிர்பாரா விதமாக குண்டு வெடித்ததில், ஜவான் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு பாதுகாப்பு படை வீரர் காயமடைந்து மேல் சிகிச்சைக்காக விமானம் மூலம் ராய்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐபிஎல் (7)

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்றிரவு 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் போட்டியில், பெங்களுரு-ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. அனைத்து 10 ஐபிஎல் அணிகளுக்கான புள்ளி பட்டியலில், தற்போது ஐதராபாத் அணி 3 ஆவது இடத்திலும், பெங்களுரு அணி 10 ஆவது இடத்திலும் உள்ளன. இதற்கிடையே, நேற்றிரவு டெல்லியில், டெல்லி-குஜராத் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 4 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வரும் 29 ஆம் தேதி வரை, தமிழக மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்ப நிலை, இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் ஒரு சில இடங்களில் வெப்ப நிலை 41 டிகிரி செல்சியஸ் வரை பதிவாகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது, ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில், ஈரோடு மாவட்டத்தில் வெப்ப அலை வீசியது. ஈரோட்டில் 42 டிகிரி செல்சியஸ், வேலூரில் 41.6, மற்றும் சேலத்தில் 41.1 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வெப்பநிலை, 34 முதல் 37 டிகிரி செல்சியசாக இருந்தது.

இதற்கிடையே, தமிழக பகுதிகளின் மேல், வளி மண்டலத்தின் கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுவதால், நெல்லை-குமரி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உலக மலேரியா ஒழிப்பு தினம், மலேரியாவிற்கு எதிரான போராட்டத்தை துரிதமாக்குவோம் என்ற கருப்பொருள் அடிப்படையில் இன்று கடைபிடிக்கப்படுகிறது. மலேரியாவை கட்டுப்படுத்த உலக அளவிலான முயற்சிகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மலேரியா நோயை முற்றிலும் ஒழிப்பதற்கான முதலீடுகளை தொடரவும், அரசியல் ரீதியில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டது.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் மே 13 ஆம் தேதி நடைபெற உள்ள 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான, திரு நரேந்திர மோடி இன்று மத்திய பிரதேஷ் மாநிலம் மொரேனா, மற்றும் உத்திரபிரதேஷ் மாநிலம் ஆக்ராவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மூத்த தலைவர்களின் தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் குறித்து, தேர்தல் ஆணையம், காங்கிரஸ்-பிஜேபி ஆகிய இரு கட்சிகளுக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.